**தலைப்பு 260 - நுவரெலியா மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 260 – நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 மே 30 இல் மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 546.00 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 523.11 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 22.89 மில்லியன் தொகை அதாவது 4.19 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 447.00 | 439.65 | 7.35 | 1.64 |
| மூலதனம் | 99.00 | 83.46 | 15.54 | 15.70 |
| மொத்தம் | **546.00** | **523.11** | **22.89** | **4.19** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக மாவட்டச் செயலகத்திற்கு 22 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்களால் ரூபா 1,882.44 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 1,727.57 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 154.87 மில்லியன் அதாவது 8.23 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய விடய இலக்கம் 26001 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 32.00 | 31.95 | 20.00 | 23.13 | 94.00 | 74.66 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 7002/0000/00/0307/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1.1 மில்லியன் ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் கீழ்வரும் 05 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 233.84 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0001/0047/000 | 0.91 |
| 6000/0000/00/0002/0063/000 | 0.84 |
| 6000/0000/00/0016/0016/000 | 122.38 |
| 6000/0000/00/0017/0003/000 | 73.37 |
| 6000/0000/00/0018/0019/000 | 36.34 |
| **மொத்தம்** | **233.84** |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்டச் செயலகத்தால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

**3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுவரெலியா தபால் அலுவலகத்தின் கூரைத் திருத்தத்திற்காக ரூபா 4,142,025 ஒப்பந்தப் பெறுமதியில் 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்காக விவசாயிகள் சங்கத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக தபால் திணைக்களத்தால் ரூபா 4,142,025 தொகை நுவரெலியா மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மொத்த ஒப்பந்தப் பெறுமதியை கருத்திற்கொண்டு விலைமனுக்களை கோருவதன் மூலம் ஒப்பந்ததாரரை தெரிவுசெய்யாமல் ஒப்பந்தம் 3

கட்டங்களின் கீழ் பிரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2014 ஒக்தோபர் 20 இல் முதலாவது கட்டத்திற்காக ஒப்பந்த சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நேரத்தில் அச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 1,596 மீதி மாத்திரமே காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது மூன்று சந்தர்ப்பங்களில் அச் சங்கத்துடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்ககளை பெற்றுக்கொள்வதற்கான இயலளவை ஒப்பந்த சங்கம் கொண்டுள்ளதா என்ற விடயத்தில் கவனம் செலுத்தாது அச் சங்கத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் விளைவாக 2016 திசெம்பர் 31 வரையிலும் மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நுவரெலியா மாவட்டச் செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களால் ரூபா 9,725,568 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு அமுல்ப்படுத்தப்பட்ட 24 செயற்திட்டங்கள் மதிப்பீடுகளில் சுட்டிக்காட்டப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் மக்களின் நன்மைக்காக அவற்றை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 45,968,553 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு நுவரெலியா மாவட்டச் செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களால் அமுல்ப்படுத்தப்பட்ட 52 செயற்திட்டங்கள் மதிப்பீடுகளிற்கிணங்க பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மக்களிற்கு நன்மையளிக்கக்கூடியதாக இருக்கக்கூடியவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமை மற்றும் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு மேலதிக நிதியேற்பாடுகள் கிடைக்காமை காரணமாக மக்களால் அச் செயற்திட்டங்கள் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஈ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 14,159,693 கூட்டுமொத்தப் பெறுமதியான 20 வேலைகள் மதிப்பீடுகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் அவ் வேலைகள் வெற்றியளித்திருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 10,475,823 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட 09 செயற்திட்டங்கள் திறக்கப்படாமையினால் அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் 2017 மார்ச் 31 வரையிலும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) நுவரெலியா மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களால் ரூபா 10,749,393 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு 10 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அந்த நிர்மாணங்களின் பின்னர் எந்தவொரு பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நுவரெலியா மாவட்டத்தின் 2 பிரதேச செயலகங்களால் ரூபா 7,131,375 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல் மற்றும் வெவ்வேறு கட்டிடங்களைச் சுற்றிய பகுதிகளை வலைகளால் மேவுகை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த நிர்மாணங்கள் கட்டிட நியம விலைவீதங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வலைகளால் மேவுகை செய்தல் நியமங்களிலிருந்து விலகி செய்யப்பட்டிருந்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஏ) நுவரெலியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களால் ரூபா 1,397,832 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் கூரைகளிற்காக 62x62x6 மிமீ அளவிலான கோண இரும்பிற்குப் பதிலாக அந்த அளவை விட குறைந்த கோண இரும்பு பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஐ) 1:2:4 கலவைக்காக 19 மிமீ சிறுகற்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 25 மிமீ மற்றும் 37.5 மிமீ சிறுகற்கள் அவற்றிற்காக மாற்றீடு செய்யப்பட்டிருந்ததால் 1:2½:5 அல்லது 1:3:6 கொங்கிறீட் கலவை விலைவீதங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 25 மிமீ மற்றும் 37.5 மிமீ சிறுகற்களைப் பயன்படுத்தி வீதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 14 சந்தர்ப்பங்களில், 1:2:4 கொங்கிறீட் கலவையின் விலைவீதத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,483,605 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை நுவரெலியா மாவட்டச் செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பரிசோதனையின் போது 51 சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக ரூபா 8,018,905 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஓ) வீதியை இணைப்புக் கற்கள் மூலம் அமைக்கும் பொழுது, நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் சிறுகற்கள் பயன்படுத்தப்படாமை, ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு சிறுகற்களை உட்படுத்தாமை மற்றும் வீதிகள் முறையாக மட்டப்படுத்தப்படாமை போன்ற குறைபாடுகளை அவதானிக்க முடிந்திருந்ததுடன் இதன் விளைவாக 2016 திசெம்பர் 31 அளவில் 07 சந்தர்ப்பங்களில் வீதிகள் கீழிறங்குதல் மற்றும் வீதியின் ஓரங்களிலுள்ள கொங்கிறீட் பாதுகாப்பு மேவுகைகள் சேதமடைதல் என்பன ஏற்பட்டிருந்தன. அத்தகைய 07 சந்தர்ப்பங்கள் தொடர்பாக 4 பிரதேச செயலகங்களால் ரூபா 6,785,584 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஔ) 5 பிரதேச செயலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் வேலைகள் பௌதீக ரீதியாக செவ்வைபார்க்கப்பட்டிருக்கவில்லை. வேலை மதிப்பீட்டிற்கிணங்க வேலைக்குரிய விலைப்பட்டியல்களை ஒப்பீடு செய்த போது 25 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அந்த அளவீடுகள் களத்தில் பௌதீக ரீதியாக கண்டுபிடிக்கப்பட முடியாதிருந்தன. ரூபா 14,315,576 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் குறிப்பிட்ட செயற்திட்டங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(க) 5 பிரதேச செயலகங்களால் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது கட்டிட நியம விலைவீதங்கள் மற்றும் வீதி நியம விலைவீதங்களை கருத்திற்கொள்ளாமல் விசேட விலைவீதங்கள் (எஸ்எஸ்ஆர்) தயாரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட 07 சந்தர்ப்பங்கள் மற்றும் பீஎஸ்ஆர் விலைவீதங்களிற்குப் பதிலாக இயந்திர மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட 02 சந்தர்ப்பங்களிற்காக ரூபா 2,963,566 கூட்டுமொத்தமான தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

(கா) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்ட பல கட்டிடங்களிற்காக பயன்படுத்தப்பட்ட தூண்களில் வெடிப்புக்கள் காணப்பட்டன. 07 சந்தர்ப்பங்களில் அந்தக் கட்டிடங்களின் நீடிப்புத்தன்மை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீர்செய்வதற்காக ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தால் ரூபா 7,895,250 கூட்டுமொத்தமான தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

(கி) வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிர்மாணம் மேற்கொள்ளும் இடங்களின் உரிமையாளர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளமல் அரசாங்க நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட 04 சந்தர்ப்பங்கள் தொடர்பில் 3 பிரதேச செயலகங்களால் ரூபா 3,473,942 கூட்டுமொத்தமான தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

(கீ) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தால் அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாத மூலப்பொருட்களை பயன்படுத்தி 03 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பில் ரூபா 1,249,662 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(கு) வலபனே மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்களால் ஐசீரீஏடி கட்டளைகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் தொடர்பான காப்புறுதிச் சான்றிதழ்களை பெற்றிருக்காத ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 4,563,065 பெறுமதியான 05 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(கூ) கருங்கல் சுவர் நிர்மாணிப்பதற்காக பீஎஸ்ஆர் விலைவீதத்தின் பிரகாரம், 6''x9'' அளவான சிறுகற்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் வலபனே பிரதேச செயலகத்தால் சென்லேனாட் பாடசாலையின் வீதியின் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் போது அதைவிடப் பெரிய சிறுகற்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 574,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(கெ) 04 சந்தர்ப்பங்களில் முறையான நியமங்களிலிருந்து விலகி திண்ணைகள் மற்றும் வடிகாண்களை நிர்மாணித்தல் தொடர்பாக 3 பிரதேச செயலகங்களால் ரூபா 318,288 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(கே) பீஎஸ்ஆர் விலைவீதத்தின் பிரகாரம் பீலிகளை பொருத்தும் போது இரண்டு பீலி கொக்கிகளுக்கிடையேயான இடைவெளி 9'' ஆக இருக்க வேண்டிய போதிலும் 10'' முதல் 2' 6'' வரையான இடைவெளியில் கொக்கிகள் பொருத்தப்பட்ட 02 சந்தர்ப்பங்கள் தொடர்பில் ரூபா 91,402 தொகை வலபனே பிரதேச செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(கை) அரசாங்க நிதிகளில் நபரொருவர் அல்லது குறைந்த நபர்களிற்கு நன்மையளிக்கக்கூடியவாறு அம்பகமுவ மற்றும் ஹங்குரன்கெத பிரதேச செயலகங்களால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் தொடர்பில் ரூபா 1,079,000 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(கொ) 2016 ஆம் ஆண்டில் நுவரெலியா பிரதேச செயலகத்தால் சாந்திபுர குளத்திற்கருகில் பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 963,975 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பாலத்தின் கொங்கிறீட் தளத்திற்கு பயன்படுத்தப்பட்ட பலகைக்கான தாங்கிகள் முறையாக பொருத்தப்பட்டிருக்காததன் காரணமாக பலகை சீரற்றிருந்த போதிலும் அவற்றை முறையாக சீர் செய்யாது கொங்கிறீட் இடப்பட்டிருந்தது. கொங்கிறீட்டிலுள்ள சிறுகற்கள், மண் மற்றும் சீமெந்து என்பன முறையாக கலக்கப்பட்டிருக்காததுடன் சிறுகற்கள் பிரிந்திருந்தது.

(கோ) நுவரெலியா பிரதேச செயலகத்தால் ருவன்எலிய தேவாலய வீதி அபிவிருத்திக்காக ரூபா 1,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 952,655 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வீதி வாரத்தைக் குறிப்பதற்காக புதிய வீதியை வெட்டும் போது இடப்பட்ட வடிகாணின் ஒரு பகுதி 2017 மார்ச் 15 வரையிலும் உடைந்திருந்தது.

(கௌ) நுவரெலியா பிரதேச செயலகத்தால் 2016 ஆம் ஆண்டில் வின்டி கோனர் இரண்டாம் வீதியின் அபிவிருத்தியின் கீழ் ரூபா 491,406 தொகை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட வீதி முழுமையாக சேதமடைந்திருந்தது.

(ச) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தால் புஸ்ஸலமங்கட மாஓய கொஸவத்தை வீதி அபிவிருத்திக்காக ரூபா 980,000 செலவிடப்பட்டிருந்ததுடன் வீதியின் அகலம் போதாமையினால் கொங்கிறீட் தூண்கள் மற்றும் பீம்கள் அமைக்கப்பட்டு மேற்பரப்பில் கொங்கிறீட் இடப்பட்டு வீதி அகலமாக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாகனம் ஓடுவதற்காக அவ் வீதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 400 மீற்றர்களான இன்னொரு வீதி முன்னைய விடயத்திலுள்ளவாறு கொங்கிறீட் தூண்கள் மீது நிர்மாணிக்கப்பட்ட பின்னர் இது வாகனங்கள் ஓடுவதற்காக பயன்படுத்த முடிந்திருந்தது. ஆனால் கொங்கிறீட் தூண்களில் அமைக்கப்பட்ட பீம்களின் தடிப்புத் தன்மை நிர்மாணிக்கப்பட்ட வீதிப் பகுதியின் சில இடங்களில் 3'' ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும், மதிப்பீட்டில் 9'' அளவில் அந்த பீம்கள் பயன்படுத்தப்பட்டிருந்துடன் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொங்கிறீட் இடுதல் முறையாக பதனிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டுநிதிக் கணக்கின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி மீதிக்கும் திணைக்களப் புத்தகத்திற்கும் இடையில் ரூபா 1,098,856 வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு 2017 சனவரி மாதத்தின் போது ரூபா 197,978 மீதி சீராக்கம் செய்யப்பட்ட போதிலும் மேலும் ரூபா 900,878 கட்டுநிதி மீதி தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காதமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கை தீர்ப்பனவு செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த முற்பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென அலுவலகத்தால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் எழுத்துமூல சான்றெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுவரெலியா மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்கள் இரண்டும் 14 சந்தர்ப்பங்களில் ரூபா 869,797 கூட்டுத்தொகையான செயல்நிமித்தக் கட்டுநிதிகளை வழங்கியிருந்த போதிலும் அக் கட்டுநிதிகள் 03 மாதங்கள் தொடக்கம் 10 மாதங்கள் வரையான காலதாமதங்களின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொத்மலே பிரதேச செயலகத்திற்கு இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தால் இந்துக் கோவில்களை மீள்நிர்மாணிப்பதற்காக 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட பணம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 240,733 தொகைகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 140 வேலைகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் மாதம் வரையான காலத்தில் பிடிபணமாக வைப்பிலிடப்பட்ட ரூபா 4,182,256 தொகை உரிய வேலைகள் திருப்திகரமாக பூர்த்திசெய்யப்பட்டிருந்ததா என மதிப்பீடு செய்து உரிய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தால் திறைசேரியின் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,854,947 தொகை 8 நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பொது வைப்புக்

கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் 2016 சனவரி 27 தொடக்கம் 2016 ஆகஸ்ட் 27 வரையான காலப்பகுதியின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்திற்கு காணிகளை சுவீகரிப்பதற்காக 2011 பெப்ரவரி 08 இல் மாகாண காணி ஆணையாளரால் ரூபா 5,000,000 வழங்கப்பட்டிருந்ததுடன் இது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 செப்தெம்பர் 19 வரையிலும் இழப்பீடு தொடர்பான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வலபனே பிரதேச செயலகத்தால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 46 சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்ட ஆனால் அப் பணம் எந்த நோக்கத்திற்காக பெறப்பட்டதென உறுதிப்படுத்தாது ரூபா 1,866,799 கூட்டுமொத்த தொகை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 மே 24 ஆம் திகதிய 4/3/1/2001/48 ஆம் இலக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் 72 வார காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 81 சந்தர்ப்பங்களில் வெவ்வேறு செயற்திட்டங்களின் கீழ் காணி சுவீகரிப்பிற்காக வைப்பிலிடப்பட்ட ரூபா 14,742,598 கூட்டுமொத்தத் தொகை நுவரெலியா மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்களின் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(எ) 2 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 6,527,508 கூட்டுமொத்தமான 214 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

26001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றை பரிசோதனை செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2015 யூன் 05 இல் வலபனே பிரதேச செயலகத்திலிருந்து மத்திய மாகாண சபைக்கு இடம்மாற்றப்பட்ட உத்தியோகத்தரொருவரின் ரூபா 143,856 கடன் மீதி கடன்பட்டோர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 ஏப்ரல் 20 வரையிலும் இக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 மற்றும் 3.8 ஆம் பிரிவுகளின் பிரகாரம், 2016 ஒக்தோபர் மாதத்தின் போது வலபனே பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்ட ரூபா 219,180 தொகையான கடன் தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் மாதம் வரையிலும் அக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வருமாறு வகைப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | கூறுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | காணிகள் (ஹெக்ரெயர்கள்) | 1.55 | கணிப்பிடப்படவில்லை | இனங்காண முடியாதிருந்தது |
| (ii) | கட்டிடங்கள் | 10 | மேற்படி | மேற்படி |
| (iii) | உழவு இயந்திரங்கள் | 01 | மேற்படி | மேற்படி |
| (iv) | தண்ணீர் பவுசர்கள் | 01 | மேற்படி | மேற்படி |
| (v) | மோட்டார் சைக்கிள்கள் | 22 | மேற்படி | மேற்படி |
| (vi) | மோட்டார் வாகனங்கள் | 08 | மேற்படி | மேற்படி |

**(ஆ) சொத்துக்கள் மீதான ஏனைய அவதானிப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் பழைய கேட்போர் கூடக் கட்டிடம் தேர்தல்கள் திணைக்களத்தின் கட்டளைக்கமைய 2015 சனவரி 09 ஆந் திகதியன்று முத்திரையிடப்பட்டிருந்தது. அத்திகதி முதல் 2017 மார்ச் 31 வரையிலும் அக்கட்டிடம் விளைவற்றிருந்தது.

(ii) மாவட்டச் செயலகத்தின் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அரச இல்லங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தின் பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களின் அரச இல்லங்கள் 2016 திசெம்பர் 31 வரையிலும் முறையே ரூபா 7,757,842 மற்றும் ரூபா 6,408,162 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ் இல்லங்கள் 2017 மே 02 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பயனாளிகளிற்கிடையில் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 5,628,804 கூட்டுமொத்தப் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2016 ஒக்தோபர் 05 ஆம் திகதி வரையிலும் அப் பொருட்கள் பயனாளிகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) யுனிசெவ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சமையலறை பாத்திரத் தொகுதி, தண்ணீரிறைக்கும் இயந்திரங்கள், சவள்கள், மண்வெட்டிகள், குழந்தைகளின் நுளம்பு வலைகள், சோஸ்பான் தொகுதிகள், செயின்சோ இயந்திரங்கள், நுளம்பு வலைகள் பீங்கான் மற்றும் கோப்பைகள் வலபனே பிரதேச செயலகத்தின் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களையும் சரியாக இனங்காண முடியாதிருந்தது. பொருட்களின் பாதுகாப்பு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கமநெகும நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் புறநெகும நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2014 ஆம் ஆண்டில் வலபனே பிரதேச செயலகத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்காக பொருத்தப்பட வேண்டிய அச்சிடப்பட்ட 211 பெயர் பலகைகள் உரிய இடங்களில் பொருத்தப்படாமல் களஞ்சியங்களில் காணப்பட்டன.

(vi) தோட்ட உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ரூபா 6,800 படி 19 பெயர் பலகைகள் மற்றும் ஒவ்வொன்றும் ரூபா 5,950 படி 141 பெயர் பலகைகள் உள்ளடங்கலாக ரூபா 968,150 கூட்டுமொத்தத் தொகை செலவிட்டு பெயர் பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 624,750 பெறுமதியான 105 பெயர் பலகைகள் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன.

(vii) தொழில்நுட்ப தவறு காரணமாக 2016 சனவரி மாதத்திலிருந்து ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்ட வலபனே பிரதேச செயலகத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனமொன்று 2017 யூன் மாதம் வரையிலும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்றுப் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கள் உரித்தாக்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | |
| மோட்டார் வாகனங்கள் | விவசாய அமைச்சு | 2.00 | 12 ஆண்டுகளிலிருந்து |
| மோட்டார் வாகனங்கள் | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.00 | 1 ஆண்டிலிருந்து |

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு மோட்டார் வாகனமொன்று முறையற்று விடுவிக்கப்பட்டிருந்தது.

## 3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 | 979,730 | 05 சந்தர்ப்பங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொண்டு பொருளிருப்பு பதிவேட்டில் பதிவுசெய்வதற்கு முன்னர் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு காசோலைகள் எழுதப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 225 மற்றும் 260 | 727,858 | பெறுநரினதும் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரினதும் கையொப்பங்களின்றி 05 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | நிதிப்பிரமாணம் 237(ஆ) | 114,000 | திருத்திய பின்னர் திருத்தம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததென இயந்திரப் பொறியியலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்த நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகளின்றிய முறையற்ற விலைப்பட்டியல்களிற்காக 2016 ஆகஸ்ட் 16 இல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 (ஆ) | மதிப்பிடப்பட வில்லை | மாவட்டச் செயலகத்தின் வாகனங்கள் தொடர்பாக வாகனங்கள் மற்றும் அதன் பாகங்கள் தொடர்பில் விரிவான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும் வாகனத்தின் பாதுகாப்பு தொடர்பில் உத்தியோகத்தரொருவரிடமிருந்து வேறொரு உத்தியோகத்தரிற்கு வாகனத்தை மாற்றிய பின்னரும் சாரதி மாற்றப்பட்ட பின்னரும் உடனடியாக அத்தகைய மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததென உறுதிப்படுத்துகின்ற சான்றெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | | |
| | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 105,000 | வழங்கப்படக்கூடிய எல்லையை ரூபா 5,000 ஆல் விஞ்சி செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| **(இ)** | **ஏனைய சுற்றறிக்கைகள்** | | |
| (i) | 2016 சனவரி 12 ஆம் திகதிய 1/2013 மற்றும் 1/2016 ஆம் இலக்க சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கைகள் | - | 04 பிரதேச செயலகங்கள் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 03 மாதங்கள் படிகள் பெறப்படாததன் அடிப்படையில் 230 சந்தர்ப்பங்கள் தொடர்பில் கொடுப்பனவுப் பதிவேட்டிலிருந்து பெயர்களை அகற்றியிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2016 யூன் 29 ஆம் திகதிய 2014/7 (முதலாம் தொகுதி) ஆம் இலக்க திவிநெகும சுற்றறிக்கை மற்றும் 2016 செப்தெம்பர் 08 ஆம் திகதிய டிடிடி/எச்ஓ/05/எம்ஈ/05/02 ஆம் இலக்க திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | - | 05 பிரதேச செயலகங்களின் 35 சமுதாய அடிப்படை வங்கிகளால் திவிநெகும பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய 420 அறிக்கைகளில் 190 அறிக்கைகள் மாத்திரம் அனுப்ப வேண்டிய திகதியில் அனுப்பப்பட்டிருந்தன. மேலும், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் 04 பிரதேச செயலகங்கள் தொடர்பான 09 திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளின் பரீட்சை மீதி 2016 திசெம்பர் 31 வரையிலும் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2016 யூன் 29 ஆம் திகதிய 7/2014 (முதலாம் தொகுதி) ஆம் இலக்க திவிநெகும சுற்றறிக்கை | - | திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகள் மூலம் பயனாளிகளிற்கு வழங்கப்படுகின்ற கடன்களின் முழுமையான செயன்முறை திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டிய போதிலும் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்திரோயகத்தர்கள் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திகதியான 2016 நவம்பர் 04 வரை உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக 06 சந்தர்ப்பங்களில் மாத்திரம் வந்திருந்தமை பங்களாஹத வங்கியின் சம்பவக் குறிப்புப் புத்தகத்தை பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |

## 3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | குறுதுஓயா அல்மா கிறமன்ட் படிக்கட்டுக்கள் அமைத்தல் | 200,000 | கிராமத்தவர்களால் அல்மா கிறமன்ட் வீதியை அபிவிருத்தி செய்யுமாறு வேண்டப்பட்டிருந்தமை. |
| (ii) | இஹல பன்னல பிரிவு நீர் விநியோகம் | 250,080 | நீர் வளங்கள் மூலம் போசனையூட்டப்படுகின்ற சேருப்பிட்டிய வயல்வெளிக்கான தண்ணீர் பெறப்படாமை காரணமாக செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தலிற்கெதிராக மக்களின் ஆட்சேபனை அதிகரித்தமை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கந்தெயாயவில் 02 குழாய்க் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டமை | மதிப்பிடப்படவில்லை | ஒதுக்கப்பட்ட பணம் போதாமை |
| (iv) | டெல்மார் கீழ் பிரிவிற்கான நீர் விநியோகம் | மேற்படி | மேற்படி |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பித்த திகதி** | **பூர்த்திசெய்ய வேண்டிய திகதி** | **பூர்த்தியடைந்த திகதி** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம்** | **தாமதத்திற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | | **ரூபா** | |
| (i) | மாவட்டச் செயலகத்தின் பதவிநிலைத் தர உத்தியோகத்தர் அரச விடுதிகள் | 7,256,180 | 2016.02.12 | 2016.05.12 | 2016.10.30 | 6,142,859 | மழை மற்றும் திட்டங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் |
| (ii) | மாவட்டச் செயலகத்திற்கு தீந்தை பூசுதல் | 5,083,288 | 2016.08.08 | 2016.12.20 | வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை | 3,209,177 | திட்டமிடலில் குறைபாடு காணப்பட்டமை மற்றும் மழை |
| (iii) | கெபியன் சுவர்களின் நிர்மாணம் | 2,657,323 | 2016.07.05 | 2016.10.05 | 2016.12.10 | 2,294,440 | மழை |
| (iv) | படகொல்ல புஸ்ஸதேவ இரண்டாம் தரப் பாடசாலையின் விளையாட்டு மைதான அபிவிருத்தி | 2,757,464 | 2015.10.23 | 2015.12.15 | 2016.10.31 | 719,341 | மழை மற்றும் ஒப்பந்ததாரர் நிர்ணயித்த திகதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முயற்சிக்காமை |
| (v) | மடுள்ள இரண்டாம் தரப் பாடசாலையின் விளையாட்டு மைதான அபிவிருத்தி | 6,538,270 | 2015.10.25 | 2015.12.15 | 2016.10.31 | 2,655,162 | மழை மற்றும் ஒப்பந்ததாரர் நிர்ணயித்த திகதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முயற்சிக்காமை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (vi) | சாத நிவாசய நிர்மாணம் - கொத்மலே பிரதேச செயலகம் | 6,102,719 | 2016.11.07 | 2016.12.20 | வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை | 2,809,162 | திட்டங்களை சமர்ப்பித்தல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் |
| (vii) | கணக்காளரின் அரச விடுதிகள் நிர்மாணம் - வலபனே பிரதேச செயலகம் | 4,716,000 | 2015.12.18 | 2015.12.31 | 2016.12.31 | 5,556,064 | திட்டங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள்<br><br>ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் |
| (viii) | ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் நிர்மாணம் | 26,664,581 | 2016.08.04 | 2016.12.20 | வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை | 12,916,413 | திட்டங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் |

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிராத செயற்திட்டங்கள்**

---

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுலா விடுதியின் மீள்நிர்மாணத்திற்காக ரூபா 1,694,655 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் வேலையுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2017 மே 02 ஆம் திகதி கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 60 தொடக்கம் 69 வரையான மதிப்பீட்டு இலக்கங்களுடன் தொடர்புடைய வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் அவற்றிற்காக ரூபா 56,020 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) புனரமைக்கப்பட்ட இரண்டு மலசலகூடங்களின் மாபிள் பதித்தல் வேலை முடிவடைந்தமை திருப்திகரமான நிலைமையில் இருக்கவில்லை.

(iii) 2017 மே 02 வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக்கான காசோலை பெறுநருக்கு வழங்கப்படாமல் கையிலிருந்தது.

(iv) பொறியியலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பொது நிர்வாக அமைச்சின் ஓய்வு விடுதியின் புனரமைப்பு தொடர்பில் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 345,523 தொகையான விலைப்பட்டியலிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) முறையற்றவாறு நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள்**

---

நுவரெலியா மாவட்டச் செயலகத்திற்கு தீந்தை பூசுவதல் தொடர்பான ஒப்பந்தங்களின் இறுதி விலைப்பட்டியலின் பிரகாரம், மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,939,084 கூட்டுமொத்தமான வேலையின் பகுதியொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலதிக வேலைகளாக குறிப்பிடப்பட்டு ரூபா 1,579,535 கூட்டுமொத்தத் தொகைகள் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில்

செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, மதிப்பீட்டின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய வேலைகளை பூர்த்திசெய்யாமல் மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக 2017 ஆம் ஆண்டில் மீண்டும் ரூபா 1,966,943 கூட்டுமொத்தமான புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.9 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) வேவண்டன் தோட்டத்தில் பாறைகள் வீழ்ந்து பாதிப்படைந்ததன் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் குடியிருந்த பகுதிகளில் பக்கச் சுவர்கள் மற்றும் கால்வாய்களின் நிர்மாணம் தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவால் அமுல்ப்படுத்தப்பட்ட வேலைகளிற்காக ரூபா 6,978,442 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,834,931 தொகை அதில் 55 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 08 செயற்திட்டங்கள், கிராமிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 01 செயற்திட்டம், கிராமிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 06 செயற்திட்டங்கள், விளையாட்டு அமைச்சின் கீழான 01 செயற்திட்டம் (2015 தொடர்ச்சி), மற்றும் மலையக புதிய கிராமம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழான 02 செயற்திட்டங்கள் என்பன உள்ளடங்கிய 18 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமலோ அல்லது பகுதியளவில் அமுப்படுத்தப்பட்டோ காணப்பட்டன.

(இ) 2015 ஆம் ஆண்டில் 58 நாட்களிற்காக 05 பிரதேச செயலகங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்டிருந்த போதிலும் பிரதேச செயலகங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் 43 நாட்களிற்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் முறையற்றவாறு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகுதல்

மாவட்டச் செயலகத்தின் கொடுக்கல்வாங்கல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அத்தகைய பெறுகைகள் வழங்கப்பட வேண்டிய நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய விலைமனுக்களிற்கு முடியுமானதாக கேள்வி கோரல் ஆவணங்களின் அனைத்து விலைமனுக்களையும் மதிப்பீடு செய்யாமல் பெறுகைக் குழு 04 பெறுகைத் தீர்மானங்களை எடுத்திருந்தது.

(ii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பெறுகைத் தீர்மானங்களிற்காக கருத்தில் கொள்வதற்கான செல்லுபடியாகும் விலைமனுக்களாக முடிவுத் திகதிக்கு பின்னர் பெறப்பட்ட விலைமனுக்கள் கருத்திற்கொள்ளப்பட முடியாதிருந்த அதேநேரம் 02 பிரதேச செயலகங்களால் பெறுகைத் தீர்மானங்களிற்காக முடிவுத் திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் கருத்திற்கொள்ளப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) கொத்மலே மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களின் பெறுகைக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் பெறுகைத் தீர்மானங்களில் அவர்களுடைய கையொப்பங்களை இட்டிருக்காத 23 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iv) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3(இ) வழிகாட்டலின் பிரகாரம், நிறுவனமானது சில நிறுவனங்களிடமிருந்து அவற்றின் முன்னைய சேவைகள் அல்லது விநியோகங்களின் பிரகாரம் மீண்டும் கொள்வனவுகளை மேற்கொள்வதில்லை என தீர்மானித்திருந்தால் கேள்வி கோரல்கள் அந் நிறுவனங்களிற்கு அனுப்பப்படக் கூடாது. ஆனால், சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் வெவ்வேறு காரணங்களிற்காக மதிப்பிடப்பட்டிருக்காத 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(v) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட/ முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அம்பகமுவ பிரதேச செயலகம் 12 சந்தர்ப்பங்களில் தனிப்பட்டவாறு வழங்கப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொண்டிருந்தது.

(vi) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம், பெறுகைச் செயன்முறையில் பங்குபற்றுவதற்கு தகுதியான விருப்பமுள்ள தரப்பினர்களிற்கு நியாயமான, சமமான மற்றும் ஆகக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் தேசிய போட்டி விலைமனுக்களை கோருதல் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு முரணாக, 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை மூலதன செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 22,500,000 கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் 2016 பெப்ரவரி தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்டு சந்தைவிலை ஒப்பீட்டு முறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்ததென பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(vii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலுடன் இணங்காமல் மாவட்டச் செயலகத்தின் துப்பரவாக்கல் சேவைகளிற்காக 02 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக ரூபா 3,300,000 தொகையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த விலைமனுக்களை சமர்ப்பித்த நிறுவனம் உடன்படிக்கை நிபந்தனைகளுடன் இணங்கியிருக்காததால் மீண்டும் விலைமனுக்களை மீளக்கோராமல் ரூபா 324,000 மேலதிகத் தொகைக்கான இரண்டாவது வழங்குநருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(viii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பெறுகைத் தீர்மானமானது ஆகக் குறைந்தது 03 முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை விடக் குறையாமல் கோரப்படுவதன் மூலம் எடுக்கப்பட வேண்டியதுடன் விலைமனுக்கள் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் மீண்டும் விலைமனுக்கள் கோரப்பட

வேண்டும். அத் தேவைப்பாடுகளிலிருந்து விலகி 13 பெறுகைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ix) நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் தீந்தை பூசுதல் தொடர்பான ஒப்பந்தத்தில் மதிப்பீடுகள் அடித்தளம் மற்றும் மேற்பரப்புக்களிற்கு பூசுவதற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், மேலதிக வேலைகளாக மொத்த மதிப்பீட்டில் 22 சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,138,085 தொகை ஒப்பந்ததாரரிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், 10 சதவீதத்திற்கு மேலான ஒப்பந்த முரணிற்காக பெறப்பட வேண்டிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனையவை**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 செயற்திட்டங்களிற்காக ரூபா 622,623 பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பொது வைப்புக் கணக்கில் அப் பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்கள் 2016 ஒக்தோபர் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்**

வலபனே பிரதேச செயலகம் 3000 முதியோர்களிற்கான படிகளை செலுத்தியிருந்த போதிலும் அதற்காக 2000 விண்ணப்பங்களே பெறப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், விண்ணப்பங்களின்றி ரூபா 2,000,000 தொகையான கொடுப்பனவுகள் ஆயிரம் முதியவர்களிற்கு மாதமொன்றிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தன.

## 3.11 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இரண்டு மோட்டார் வாகனங்கள் தொடர்பாக கொத்மலே பிரதேச செயலகத்தால் பேணப்பட்ட எரிபொருள் பதிவேட்டை நாளாந்த ஓட்ட அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்த போது எரிபொருள் பதிவேட்டின் பிரகாரம் பெறப்பட்ட ரூபா 36,468 பெறுமதியான 383.87 லீற்றர்கள் எரிபொருள் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்படாமல் வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பப்பட்டதென குறிப்பிட்டு பிழையான விலைச்சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டு பணம் பெறப்பட்டிருந்தது.

## 3.12 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சேதம் ஏற்பட்டதிலிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக 2 மோட்டார் வாகன விபத்துக்களின் ரூபா 137,050 நட்டம் மற்றும் 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சின் போது ஏற்பட்ட 5 மோட்டார் வாகன விபத்துக்களின் ரூபா 320,150 நட்டம் என்பன நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படவோ அல்லது விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் பொறுப்பான நபர்களிடமிருந்து அறவிடப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 மே 23 இல் ஏற்பட்ட தீ காரணமாக கச்சேரி கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் சரியான மதிப்பீட்டை பெறுவது 22 வருடங்களிற்கு மேலாக சாத்தியமற்றிருந்ததுடன் அவை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மெடிபெம்பிய ஆலோக பெத்த மஹா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 980,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் சுவர் இடிந்து வீழ்ந்திருந்ததுடன் 2017 மார்ச் வரையிலும் இது மீண்டும்

நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்பான நபர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 3.13 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் மாவட்டச் செயலகத்தால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 1.8(அ)VII | முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள் |
| 2013 | 1.7(அ)I, II | சொத்து முகாமைத்துவம் |
| | 1.7(இ) | சொத்து முகாமைத்துவம் |
| | 1.8(அ)V.II | இணங்காமைகள் |
| | 1.14. III | முகாமைத்துவ நலிவுகள் |
| 2014 | 3.8 | சொத்து முகாமைத்துவம் |
| | 3.9 | இணங்காமை |
| | 3.11 | முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள் |
| | 3.14 | முகாமைத்துவ நலிவுகள் |
| 2015 | 3.1 இலிருந்து 3.14 வரை | முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்,<br>சொத்து முகாமைத்துவம்,<br>இணங்காமைகள்,<br>முகாமைத்துவப் பலவீனங்கள் |

### 3.14 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வைகளின் போது பின்வரும் முகாமைத்துவப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொத்மலே, நுவரெலியா, வலபனே மற்றும் ஹங்குரன்கெத பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் தனிநபர் கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 இல் கொத்மலே பிரதேச செயலக பிரிவின் றம்பொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடுகளிற்கு ஏற்பட்ட சேதங்களிற்காக 2016 மார்ச் 31 ஆம் திகதிய மா.செ.நு/05/10/02/10 ஆம் இலக்க மாவட்டச் செயலாளரின் கடிதத்தின் மூலம் ரூபா 390,000 தொகையான உதவி 13 வீடுகள் தொடர்பில் அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு திகதியான 2016 செப்தெம்பர் 07 வரையிலும் அந்தத் தொகையை பயனாளிகளிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 சனவரி தொடக்கம் செப்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது நுவரெலியா பிரதேச செயலகத்தின் அதிகார எல்லைக்குள் உள்ள 72 கிராம அலுவலர் பிரிவுகளில் 8675 சிறார்களுடன் 298 முன்பள்ளிகள் செயற்பாட்டிலிருந்தன.

ஒரு குவளை தூய பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 16 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 22 முன்பள்ளிகளில் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, அத்தகைய நன்மையை பெற்ற சிறார்களின் எண்ணிக்கை 456 ஆக இருந்ததுடன் 95 முன்பள்ளிச் சிறார்கள் அத்தகைய நன்மையினை இழந்திருந்தனர்.

(ஈ) கொத்மலே பிரதேச செயலக பிரிவினுள் 85 பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகள் மற்றும் 115 முன்பள்ளிகள் மற்றும் தோட்ட குழந்தை அபிவிருத்தி நிலையங்கள் காணப்பட்டதுடன் 1900 குழந்தைகள் இவற்றில் பதிவுசெய்திருந்தனர். அக் குழந்தைகளில் 73 சதவீதம் ஒரு குவளை தூய பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை பெற்றிருக்கவில்லை.

(உ) 2016 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ரூபா 464,581 பெறுமதியான ஏழு காசோலைகள் 2017 மார்ச் 14 வரையிலும் பெறுநருக்கு கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கையிலிருந்தது.

(ஊ) 2015 யூன் 11 ஆம் திகதிய 2015/06/01 ஆம் இலக்க திவிநெகும மானிய உதவிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், மானிய உதவிகளிற்காக ஒதுக்கப்பட்ட கட்டுநிதி அந்த நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் திவிநெகும பயனாளிகளின் கணக்குகளிற்கு தலைமை அலுவலகத்திலிருந்து நுவரெலியா மாவட்டத்தின் திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளால் பெறப்பட்ட பணத்தை செலவு வைப்பதற்கு 30 நாட்கள் தொடக்கம் 107 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதங்கள் ஏற்பட்டிருந்த 114 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. செலுத்த வேண்டிய திகதியில் பயனாளிகளின் கணக்குகளிற்கு பணம் செலவு வைக்கப்பட்டிருக்காததால் ரூபா 1,421,781 வட்டியை ஈட்டுவதற்கான சந்தர்ப்பத்தை பயனாளிகள் இழந்திருந்தனர்.

(எ) திவிநெகும திணைக்களத்திடமிருந்து வங்கிக்கு நிதி உதவி அனுப்பப்படுவதற்கு முன்னர் 04 சந்தர்ப்பங்களில் 03 வங்கிகளால் பயனாளிகளின் கணக்குகளிற்கு ரூபா 8,128,350 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2015 யூன் 11 ஆம் திகதிய 2015/06/01 ஆம் இலக்க திவிநெகும மானிய உதவிகள் சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம், மானிய உதவிகளிற்காக ஒதுக்கப்பட்ட கட்டுநிதியை உரிய நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தி கொடுப்பனவுகளை முறையாக தீர்ப்பனவு செய்தல் திவிநெகும துறையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், சில வங்கிகள் 01 மாதம் தொடக்கம் 04 மாதங்கள் வரை பயனாளிகளின் கணக்குகளிற்கு நிதி உதவியை செலவு வைப்பதற்கு தாமதித்திருந்ததுடன் அதனால் ரூபா 264,758,670 தொகையான நிதி உதவி ஒரு மாத காலப்பகுதிக்கு மேலாக வங்கிகளில் காணப்பட்டன.

(ஐ) 2015 மே 20 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் நெறிப்படுத்தல்களிற்கு முரணாக மாவட்டச் செலகத்தின் 19 பெறுகைக் குழுக்கள் அலுவலக நேரத்தில் புதன் கிழமைகளில் நடைபெற்றிருந்தன.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு உள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 25 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 20 | 11 | 09 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 942 | 778 | 166 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 87 | 73 | 17 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **1083** | **889** | **201** | **07** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் பிரதேச செயலாளர், உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய அலுவலகத்தின் 3 பதவிநிலைத் தர பதவிகள் வெற்றிடமாகவிருந்ததுடன் அலுவலகத்தின் செயலாற்றலை இது நேரடியாகப் பாதித்திருந்தது.

(ஆ) சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள் வெறிறிடமாகவிருந்ததுடன் பிரிவின் சீரான செயற்பாட்டை இது பாதித்திருந்தது.